வெளிச்சத்திற்கு வராத வெளிச்சங்கள்

சிறுவன்

சிறுமி

விதவை



பாவியான ஸ்திரி



விதவை



Rt. Rev. Dr. David Pothirajulu

(1936 – 2020)

The Father will honor the one who serves me – John 12:26

Mrs. P. Ebenezer

வெளிச்சதிற்கு வராத வெளிச்சங்கள்

முன்னுரை :-

மெழுகானது தன்னைத்தான் உருக்கி கொண்டு தனக்குள்ளே இருக்கிற வெளிச்சத்தை கொடுக்கிறது.அந்த வெளிச்சம் வெளியே காணப்பட்டால், மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவ்வாறாக நம்முடைய வெளிச்சத்தின் அளவு எவ்வளவு என்பது முக்கியமல்ல,நாம் செய்வது சிறிய காரியங்களாக இருந்தாலும், இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்க்கைக்கென்று வைத்திருக்கிற நோக்கத்தை உணர்ந்தவர்களாக அவருக்கென்று எரிந்து பிராகாசிக்கிற விளக்குகளாக நாம் காணப்பட வேண்டும்.

விளக்கவுரை:-

இயேசு கற்பித்தார் ஒளி வீசவே என்ற பாடலின் ஆங்கில versionல் "You in your small corner and I in mine"தமிழிலே அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம் என்று இருக்கும்.ஆனால் அதைவிட இந்த சொற்கள் சிறந்ததாக எனக்கு தெரிகிறது. நாம் எங்கு இருக்கிறோம் என்பது முக்கியமல்ல,ஆனால் எங்கு இருந்தாலும் நம்முடைய சூழல் எப்படி இருந்தாலும் நாம் கிறிஸ்துவுக்கு என்று கிறிஸ்து நமக்கென்று வைத்த காரியங்களை,நியமித்த காரியங்களை நாம் நிறைவேற்ற அது சிறியதாக இருந்தாலும் சரி பெரியதாக இருந்தாலும் சரி.அவற்றை நிறைவேற்ற நாம் அழைப்பு பெற்றவர்களாக இருக்கிறோம்.

இப்பொழுது நாம் ஐந்து கதாபாத்திரங்களை இதற்கென்று பார்க்கப் போகிறோம்.

முதலாம் கதாபாத்திரம் இயேசுவின் இடத்தில் தன்னிடத்தில் இருந்த **ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்த சிறுவன்.**

இது நான்கு சுவிசேஷங்களிலும் காணப்பட்டாலும் (இந்த சம்பவம்)காணப்பட்டாலும் யோவான் மாத்திரமே ஒரு சிறுவன் கொடுத்தார் என்று குறிப்பிடுகிறார். அப்படியென்றால் அந்த சிறுவன் எந்த எதிர்பார்ப்பும் இன்றி எந்த பிரதிபலனின்றி தன்னுடைய பெயர் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் இயேசுவுக்கு என்று அந்த தன்னுடைய சிறிய காணிக்கையை கொடுத்தான்.சொல்லப்போனால் தான் வைத்திருந்த எல்லாவற்றையும் கொடுத்து விட்டான். ஒருவேளை அவருடைய பெயர் வேதத்திலே குறிப்பிடப்படாமல் இருந்தாலும் கூட இன்றைக்கு அவர் உலகம் முழுமைக்கும் ஒருவேளை 2000 ஆண்டுகளுக்கு பின்னால் நமக்கும் கூட ஒரு மிக சிறந்த உதாரணமாக,ஈகையிலே சிறந்த உதாரணமாக காணப்படுகிறார். கர்த்தருக்கென்று கொடுக்கிற காரியத்திலே, அது பணம், பொருள் என்று மட்டும் அல்ல,நம்முடைய உழைப்பு, நம்முடைய தாலந்து, இவ்வாறாக நமக்கு என்று கர்த்தர் என்ன கொடுத்தாரோ, அவற்றை அவருக்கு கொடுக்க நாம் அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

மிஷனரி பணிக்காக ஒரு இடத்திலே காணிக்கை எடுத்துக் கொண்டு இருந்தார்கள்.ஒரு வயதான தாயார் தன்னிடத்தில் எந்த பணமும் இல்லை என்று சொல்லி பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு ஊன்று கோல் இல்லாமல் நடக்க முடியாது. காணிக்கை கொண்டு வரவில்லை என்ற உணர்வு அவர்களுக்கு இருந்ததினாலே காணிக்கை பை தன்னிடத்தில் வரும் போது காணிக்கை எடுப்பவரிடம் தன்னுடைய இரண்டு ஊன்று கோல்களையும் கொடுத்து விட்டார்கள். அதைப்பார்த்த உடன் அநேகர் அதிக காணிக்கைகளை கொடுத்தார்கள். அப்போது அந்த செய்தியாளர்,

அந்த தாயாரிடத்தில் சென்று, "அம்மா, தங்களுடைய ஊன்று கோல், எங்களுக்கு இன்று ஊன்றுகோலாயிருந்தது. இப்பொழுது நீங்கள் அதை வைத்து கொள்ளுங்கள்" என்று கொடுத்தார். அவருடைய கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பலருக்குள்ளாக தாக்கத்தை ஏற்படுத்தி மற்றவர்களை கர்த்தருக்கென்று கொடுக்க வைத்தது. நாமும் நம்மிடம் என்ன இருக்கிறதோ, அது அளவு சிறியதாக கூட இருக்கலாம். அதை கிறிஸ்துவுக்கென்று கொடுக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம்

இரண்டாவதாக, **இஸ்ரவேல் தேசத்து சிறுமி** ஒருவரை சீரிய தேசத்தார் சிறை பிடித்துக் கொண்டு வந்து,நாகமான் என்ற படைத்தலைவனுக்கு பணிவிடை செய்யும் படியாக அவர்களை கொடுத்து விட்டார்கள். அவர்களை நாம் பார்த்தோம் என்றால் ஒரு அடிமை பெண்ணாக இருக்கிறார்கள். அவர்கள் கடவுளைக்குறித்து தன்னுடைய எஜமானுக்கு எவ்வளவு தூரம் சொல்ல முடியும் என்று தெரியாது.அவர்கள் ஒரு சிறுமி. எனவே ஒரு சிறுமிக்கு உரிய ஆசைகள் அவரிடத்தில் காணப்படும். வெளியே சென்று விளையாட வேண்டும், அவருடைய பெற்றோரோடு நேரம் செலவிட வேண்டும், தன்னுடைய உறவினர்களை பார்க்க வேண்டும், தன்னுடைய நண்பர்களைப்பார்க்க வேண்டும்,தன்னுடைய ஊருக்கு செல்ல வேண்டும் என்ற ஆசைகளெல்லாம் இருந்திருக்கும். யெகோவா தேவனை வழிபட வேண்டும், ஆலயத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசைகளெல்லாம் இருந்திருக்கும். ஆனால் அவர்களால் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாமல் போனது. அடிமையாய் இருக்கும் போது வேத வாக்கியங்களை தியானிக்கக்கூட அவர்களுக்கு நேரம் கொடுக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் அவர்கள் அதைக்குறித்து கவலைப்பட்டதாக தெரியவில்லை. சொல்லப்போனால் நாகமானுக்கு அப்படி ஒரு குஷ்டரோகம் வரும், அவர் நம் மூலமாய் மெய்யான தேவனை ஏற்றுக்கொள்வார் என்ற எண்ணம் அவர்களுக்கு ஆரம்பத்தில் வந்திருக்க வாய்ப்பு இல்லை. அப்படியிருந்தும் அவர்கள் தன்னுடைய எஜமானையும், எஜமாட்டியையும் நேசித்து, அவருடைய குடும்பத்தை தன்னுடைய குடும்பமாக நேசித்து செயல்பட்டார்கள் என்று அறிய முடிகிறது.ஒருவேளை அவர்கள் நினைக்கலாம், என்னை என்னுடைய குடும்பத்தாரிடம்இருந்து இவர்கள் பிரித்ததார்கள் ,என்னுடைய நண்பர்கள் இடத்திலிருந்தும் பிரித்தார்கள் ஆகையினாலே கர்த்தர் அவர்களை தண்டித்தார் என்று சொல்லி மகிழ்ந்திருக்கலாம். ஆனால் எஜமானுக்கு சுகமாக வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே காணப்பட்டதாக தெரிகிறது. அவர் சுகம் அடைய வேண்டும் என்று விரும்பி தன்னுடைய நாட்டில் இருக்கிற தீர்க்கதரிசியை குறித்து தன்னுடைய எஜமானிடம் பகிர்ந்து கொள்கிறார்கள்.விளைவு அவர் மெய்யானகடவுளை ஏற்றுக் கொள்கிறார். பிறகு அந்த சிறுமியை அவர் நேசித்திருக்க கூடும்.ஆனால் அந்த சிறு குழந்தைக்கு அந்த எதிர்பார்ப்பு இருந்திருக்காது. நாமும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கடவுள் என்று உழைக்கும் போது அது நமக்கும் ஆசிர்வாதத்தை கொண்டு வருகிறது என்று அறிந்து கொள்கிறோம்.

மூன்றாவதாக,ஆண்டவருக்கு என்று **இரண்டு காசு போட்ட விதவையைக்குறித்து** நாம் பார்க்கப்போகிறோம். அந்த காலங்களில் காணிக்கை போடும் போது ஒரு கூட்ட மக்கள் அமர்ந்திருந்து பார்த்து கோண்டிருப்பார்கள். அதிக காணிக்கை போடுபவர்கள் முன்பதாக தாரை ஊதப்படும் என்பதும் நமக்கு தெளிவாகிறது.அவர்கள் போடும் பணத்திற்கு தக்கதாக ஜனங்கள் அவர்களை பாராட்டுகிறார்கள் என்பதும் நமக்கு தெரிகிறது. இங்கே ஒரு விதவைப்பெண்னை பார்க்கிறோம்.அவர்களுக்கு ஜீவனத்துக்கு என்றே பணம் இல்லை. ஆனால் கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சை அவர்களுக்கு இருக்கிறது. இரண்டு பணமாக தனக்கு ஜீவனத்துக்கு வைத்திருந்தாலும் அந்த இரண்டு பணத்தை

ஆண்டவருக்கு என்று போட வேண்டும்,நான் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு அவரிடத்தில் இருந்திருக்கிறது. இந்த காரியங்களை அவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். அனேக பணக்காரர்கள்,ஆஸ்தி உள்ள வர்கள் தாரை ஊதி வரும் இடம் என்று அவர்களுக்கு நன்றாக தெரியும். இருந்தாலும் கடவுளுக்கு என்று கொடுக்கும் வாஞ்சை இருந்தது. யார் என்னை கேலி செய்தாலும் பரவாயில்லை. என்னுடைய ஜீவனத்திற்கென்று பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஒரு வேளை மரிக்கும் தருவாய் வந்தாலும் பரவாயில்லை. கடவுளுக்கு நான் கொடுக்க போகிறேன் என்ற வாஞ்சையோடுஅவர்கள் காணிக்கை செலுத்துகிறார்கள். யாரையும் பார்க்காமல் காணிக்கை செலுத்தி செல்ல வந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் பார்வை அவர்கள் மேல் பட்டது.தன்னுடைய சீடர்களின் எண்ண ஓட்டத்தை அவர் மாற்றுகிறார். அது குறைந்த பணம் அல்ல, இது தான் அதிகமான பணம், தியாகமான பணம் என்பதை அவர் அவர்களுக்கு உணர்த்துகிறார். அது மட்டும் அல்ல அவர்கள் செய்த அந்த செயலானது வேதத்திலே பதிவேற்றப்பட்டிருக்கிறது. நாம் கொடுப்பது சொற்பமாக இருப்பதினால் பிறரால் கேலி செய்யப்பட்டாலும் அது பரவாயில்லை என்று சொல்லி நாம் அறிந்து கொள்கிறோம்.இவர்கள் நல்ல எடுத்துக்காட்டை நமக்கு கொடுக்கிறார்கள்.

நான்காவதாக, இயேசு கிறிஸ்து கானானிலே ஒரு கிணற்றின் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். அப்பொழுது அவரை தேடி **பாவியான ஸ்திரீ என்று சொல்லப்படுகிறது,**இருந்தாலும் அவர்களிடத்தில் கடவுளை அறிந்து கொள்ள வேண்டும், மேசியாவை காண வேண்டுமென்கிற வாஞ்சை இருந்தது. அவருடைய வார்த்தைகளைகேட்க வேண்டும் என்ற வாஞ்சை அவர்களிடத்திலே காணப்பட்டது. அதை அறிந்தவராக கடவுள் சரியான நேரத்திலே அந்த இடத்திற்கு செல்லுகின்றார். அவர்களை சந்திக்கிறார்.சந்தித்து அவர்களோடு உறவாடி அவர்கள் இடத்தில் இருக்கிற ஆர்வத்தை அறிந்து கொண்டு, அவரிடத்திலே அவர்கள் விரும்பிய வண்ணமாக கடவுளை எங்கும், பிதாவை எங்கும் தொழுது கொள்ளும் காலம் வரும் என்ற நற்செய்தியை அவர்களுக்கு கொடுக்கின்றார். அது மட்டும் அல்ல, அவர்களுடைய வாழ்விலே நடந்த சில காரியங்களையும் அங்கு சீர்படுத்துகின்றார்.அந்த ஸ்திரீ அதை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய பாவங்களில் இருந்து மனம் திரும்பி, இனி கிறிஸ்துவுக்காக வாழ்வேன் என்ற தீர்மானத்தை எடுத்தவர்களாய் அவர்கள் செயல்பட தொடங்குகிறார்கள். நற்செய்தியை சமாரியா முழுமைக்கும் அறிவிக்கின்றார்கள். இயேசுவிடத்திலே மக்களை கொண்டு வருகின்றார்கள். கர்த்தர் நம்முடைய ஆர்வத்தை அறிந்திருக்கின்றார்,நாம் அவருக்காக ஊழியம் செய்ய விரும்புகிறோம் என்பதை அறிந்திருக்கின்றார். ஆனால் நாம் அந்த சத்தத்திற்கு, ஏசுவின் சத்தத்திற்கு நாம் செவி கொடுக்கிறவர்களாக உடனே செயல்படுகிறவர்களாக காணப்பட வேண்டும். நம்முடைய ஊழிய ஸ்தலம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை.

என்னுடைய அம்மாச்சி,Mrs. P. Ebenezer, அவர்களுக்கு 86 வயது. வீட்டிலேயே இருந்தார்கள்.ஆனால் வீட்டிலே அவர்கள் கிறிஸ்துவை காட்டியதினாலே எங்க வீட்டில் அவர்களுக்கு உதவி செய்ய வந்தவர்கள் எல்லாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அதில் ஒருவரின் பேரனுக்கு பேச முடியாமல் இருந்தது. அவர்களோடு இணைந்து என்னுடைய அம்மாச்சி ஜெபித்ததினால் ஐந்து வயது நிரம்பிய அந்த தம்பி பேச ஆரம்பித்து விட்டார். ஆகையினாலே அவர்கள் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தார்கள்.இன்னும் இருவரும் கூட கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்ந்தார்கள். நம்முடைய ஊழிய ஸ்தலம் எதுவாக இருந்தாலும் ஒளியைப்பெற்றுக்கொண்டோம் என்றால், அதை நாம் பிறருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.இந்த இடத்திலே நான் ஒரு முக்கியமான

காரியத்தை பதிய வைக்க விரும்புகிறேன்.அநேக திருச்சபைகளிலே,பெண்கள் பிரசங்கிப்பதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை.ஆனால் இந்த இடத்திலே அவர்களை அனுமதிக்கலாமா அனுமதிக்க கூடாதா என்கிற விவாதங்கள் நடைபெறுகின்றன.இந்த இடத்தில் தெளிவாக ஆண்டவர் காட்டுகின்றார், பெண்கள் ஊழியங்களில் உபயோகிக்க பட வேண்டும்.அவர்கள் கடவுளுடைய வார்த்தையை பிரசங்கிக்கலாம். ஒரு வேளை அவர்கள் பாவிகளாயிருந்தால் அவர்கள் மனம் திரும்பும் போது அவருடைய பழைய பாவங்களை ஆண்டவர் நினைவு கூறுவதில்லை.நம்முடைய பாவங்களில் இருந்து நாம் மனம் திரும்ப அழைக்கப்பட்டு இருக்கிறோம்.மனம் திரும்பிய உடனே கர்த்தர் அந்த பாவத்தை மன்னிக்கிறார்,பாவத்தை மறக்கிறார்,தன்னுடைய கணக்கிலிருந்து அந்த பாவத்தை எடுத்து போடுகின்றார். ஆகையினாலே நாம் தைரியமாக பிரசங்கிக்க முடியும். கர்த்தர் நம்மை அழைக்கிறார். இங்கே பெண்கள் ஊழியம் செய்யலாம் என்ற காரியமும் இருக்கிறது பாவியானவர்கள் மனம் திரும்பிய பின்பதாக ஊழியம் செய்யலாம் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பழைய பாவங்களை முன்னிறுத்தி அவர்களை பேசக்கூடாது என்று சொல்லக்கூடாது அவர்களுக்கு அவருடைய பழைய காரியங்களை நினைவூட்டவும் கூடாது. அவர்களை முழுமனதாக அவர்கள் கர்த்தருடைய பிள்ளையாக மாறினார்கள் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கு இன்னொரு காரியத்தையும் நான் பதிய வைக்க விரும்புகிறேன். கர்த்தர் **என்னுடைய தாத்தா, Rt. Rev. Dr. D. Pothirajulu** அவர்கள் மூலமாக பெண்கள் குருவானவர்களாக வருவதற்கு தென் இந்திய திருச்சபையிலே அவர்களை பயன் படுத்தினார். முதல் மூன்று பெண் குருவானவர்கள் நம்முடைய திருமண்டலத்தில் தான் அபிஷேகம் செய்ய பட்டார்கள். அப்படிப்பட்ட திருமண்டலத்தில் நாம் அங்கத்தினர்களாக இருப்பதற்கு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

ஐந்தாவதாக, **சாரிபாத் ஊர் விதவை**யை குறித்து நாம் பார்க்க போகிறோம்.அவர் இடத்திலே எலியா செல்கிறார். அது எப்பொழுது என்றால் அந்த ராஜாவுக்கே அவர் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிற காலம். நீங்கள் அதற்கு அடுத்த அடுத்த அதிகாரங்கள் எல்லாம் பார்க்கின்ற பொழுது 18 ஆம் அதிகாரத்தில், கர்த்தரே தெய்வம் என்று சொல்லி வானத்தில் இருந்து அக்கினி இறக்குகிறார். 19 ஆம் அதிகாரத்திலே, போதும் கர்த்தாவே என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல,நான் உம்மிடத்திற்கு வருகிறேன் என்று சொல்கிறார். அதற்கு பின்பாக கர்த்தர் அவரை பலப்படுத்துகிறார்.இந்த காரியங்களை எல்லாம் நாம் பார்க்கிறோம். இஸ்ரவேல் தேசத்தார் கடவுளை விட்டு பின் வாங்கிய காலம் அது. இந்த சூழலில், இவரை ஏற்றுக்கொள்கிறார்,அந்த சாரிபாத் ஊர் விதவை. இதை குறித்து இயேசு கிறிஸ்துவும் லூக்கா நான்காம் அதிகாரம்,25 முதல் 26 ஆம் வசனங்களிலே குறிப்பிடுகிறார்.ஒரு தீர்க்கதரிசிக்கு தன்னுடைய ஊரில் கனம் கிடைப்பதில்லை என்று சொல்லி அவர் இந்த பெண்ணை உதாரணம் காட்டி கூறுகின்றார்.ஒரு வேளை கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது,தடை செய்யப்பட்ட இடங்களில் கடினமானதாக நமக்கு இருக்குமானால்,இக்கட்டான இஸ்ரவேல் தேசத்தின் கால சூழழில் அந்த பெண் எலியாவை ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த விதவை ஒரு டேட்டா கூட சொல்லுது 1 in 7 Christians live in countries where following Jesus Christ is restricted என்று சொல்லுகிறது.அப்படிப்பட்ட கடினமான சூழலிலே கர்த்தருடைய ஊழியக்காரரின் வார்த்தையை கனப்படுத்தி அவருக்கு ஊழியம் செய்தார்கள்.அவர்கள் செய்தது வெளியே சொல்லப்படும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.எலியா சொல்கிறார் பஞ்சம் இந்த தேசத்தை விட்டு போகுமட்டும் போக மாட்டேன்.அது வரை கலசத்தில் எண்ணை குறைவதும் இல்லை, பானையில் மா குறைந்து போவதுமில்லை என்று

சொல்லுகின்றார். எனவே அவர்கள் எலியாவுக்கு ஒரு இக்கட்டான காலத்திலே உதவி செய்கிறார்கள். அவர்களுக்கே உணவில்லாத நிலையில் கடைசி மாவில் முதல் அப்பத்தை கொண்டு வா என்று சொல்லுகின்றார்.தீர்க்கதரிசியை அவர்கள் கனப்படுத்தினதினாலே உண்மையிலேயே கலசத்தில் எண்ணெய்யும், பானையில் மாவும் குறையவில்லை. அது மட்டும் அல்லாமல் கர்த்தர் இன்னும் ஒரு பெரிய ஆ சீர்வாத்தையும் அவர்களுக்கு தருகின்றார். அவர்கள் மகன் மரித்துப் போகின்றார்,அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரருக்கு அந்த செய்தி தெரிய வந்தபோது, அந்த மகனுக்கு அவர் ஜீவனை கொடுக்கின்றார்.இன்னும் சொல்லப்போனால் அவர்கள் விதவை என்று போடப்பட்டிருக்கிறது. எனவே அவரகளுக்கு அந்த மகன் அவரகளுக்குஎவ்வளவு முக்கியம் என்பதை நாம் இந்த இடத்திலே குறிப்பிட வேண்டியது இருக்கிறது.கர்த்தர் அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதத்தை இக்கட்டான காலத்திலே,அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரரை ஏற்றுக் கொண்டார்கள் என்ற சூழ்நிலையிலே அவர்களுக்கு தருகிறார்.

முடிவுரை:-

நாம் முதலாம் நூற்றாண்டில் பார்க்கின்ற பொழுது, சீஷர்களே மறைந்து தான் வாழ்ந்தார்கள் என்று நம்மால் அறிய முடிகிறது.ஏன் இயேசு கிறிஸ்துவே எருசலேம் நகரத்திற்குள் தன்னுடைய ஊழிய நாட்களிலே பெரும்பாலான பகுதியிலே வர முடியவில்லை.இருந்தாலும் இன்றைய நாட்களிலே உலகில் அநேகர் கிறிஸ்துவை பின்பற்றுகின்றார்கள் என்று நம்மால் அறிய முடிகிறது. ஆகையினாலே நாம் நம்முடைய வெளிச்சமானது இன்றைய நாட்களிலே ஒருவேளை மறைந்ததாக காணப்படலாம் இந்த நாட்களிலும் கூட அநேகர் அறியாத வெளிச்சங்கள் ஆகத்தான் வாழ்ந்து வருகின்றார்கள்.ஒளிக்கு வராத வெளிச்சங்களாகத்தான் வாழ்ந்து வருகின்றார்கள். அப்படி வாழ்பவர்களுக்காக, நாம் இந்த நாளிலே இந்த காலங்களிலே ஜெபிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தரிடத்தில் அவர்களுக்காக மன்றாடுவோம்.உலகிலே யார் யார் மறைக்கப்பட்ட வெளிச்சங்களாக இருக்கிறார்களோ,அல்லது வெளிச்சத்திற்கு வராத வெளிச்சங்களாக இருக்கிறார்களோ, இன்றைய நாட்களிலே அப்படி இருக்கிறவர்களுக்காக நாம் ஜெபிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சான்றாதாரங்கள்:-

யோவான் :- 6:9

II இராஜாக்கள் :- 5:1-3

மாற்கு :- 12:41-44

லூக்கா :-21:1-4

யோவான் :- 4:1-43

I இராஜாக்கள் :- 17:8-24